©
தமிழ்நாடு அரசு
1997

# நிதி (வருவாய் ஆதாரங்கள்) துறை

## அரசாணை நிலை எண் 225, 1997 ஆம் ஆண்டு மே திங்கள் 2 ஆம் நாள்

(ஈஸ்வர, சித்திரை 19, திருவள்ளுவர் ஆண்டு 2028)

மாநில நிதி ஆணையம் – மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் – நிதி வாயில்கள் ஒதுக்கீட்டு செயல்முறை தொடர்பான பரிந்துரைகள் – மாநில அரசிடமிருந்து நிதி பகிர்வு – ஆணைகள் – பிறப்பிக்கப்படுகின்றன.

---

படிக்கவும்:–

1. அரசாணை எண்.350, நிதி (வருவாய் ஆதாரங்கள்) துறை, நாள் 23.4.94
2. அரசாணை எண்.971, நிதி (வருவாய்ஆதாரங்கள்) துறை, நாள் 6.12.94
3. அரசாணை எண்.821, நிதி (வருவாய்ஆதாரங்கள்) துறை, நாள் 26.10.95
4. அரசாணை எண்.684, நிதி (வருவாய்ஆதாரங்கள்) துறை, நாள் 31.10.96

*****

**ஆணை:-**

அரசமைப்புச் சட்டத்தின் 73–ஆம் திருத்தத்திற்கேற்ப, ஊராட்சிகளின் நிதி நிலைமைகளை ஆய்வுசெய்து, உரிய பரிந்துரைகள் செய்ய, பார்வை 1–ல் உள்ள அரசாணையில் மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. பார்வை 2–ல் உள்ள அரசாணையில், இந்த ஆணையத்தின் ஆய்வு வரம்பு, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற ஏனைய உள்ளாட்சி மன்றங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. பார்வை 3, 4–ல் உள்ள அரசாணைகளில், மாநில நிதி ஆணையத்தின் பதவிக்காலம் 30.11.96 வரை நீட்டிக்கப்பட்டது. மாநில நிதி ஆணையம், அதன் அறிக்கையை 29.11.96 ஆம் நாளன்று ஆளுநர் அவர்களிடம் அளித்தது.

2. மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிப் பகிர்வு செய்தல், ஊரக, நகர் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே பகிர்வு செய்தல், ஊரக, நகர் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்குள்ள பல்வேறு அடுக்கு நிலை அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்தல் ஆகியவை தொடர்பான மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்தது. முக்கியப் பரிந்துரைகள் அரசின் முடிவுகள், 5.3.97 ஆம் நாளன்று சட்டமன்ற பேரவையில் வரவு–செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டன.

3. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, பின்வருமாறு முடிவு செய்துள்ளது:–

(அ) 1997-98 ஆம் ஆண்டு முதற்கொண்டு, கேளிக்கை வரி வரவுகளில் 90% உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும்.

(ஆ) 1997-98 முதற்கொண்டு, கேளிக்கை வரி நீங்கலாக, மாநில வரிகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் 8 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும்.

(இ) மேலே பத்தி 3(ஆ)–ல் குறிப்பிட்டுள்ள தொகையில், 15 சதவீதம், பகிர்வு கொள்கையைச் செயற்படுத்துவதால் ஏற்படக்கூடிய குறைபாடுகளை சரிசெய்வதற்காகவும், உள்ளாட்சி மன்றங்களிலுள்ள உள்ளூர் வரி வசூல் முயற்சிகள், நிதி ஆதாரங்களை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான தற்போதுள்ள ஊக்க மானியங்களைத் தொடர்ந்து வழங்கவும், சமன்பாட்டு–ஊக்க நிதிக்கு ஒதுக்கப்படும். இந்த நிதி 60:40 என்ற விகிதத்தில், ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படும்.

(ஈ) மேலே 3(ஆ) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் எஞ்சியுள்ள 85 சதவீதம், 55:45 என்ற வீதத்தில் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

(உ) ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, முறையே மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே 10:45:45 என்ற வீதத்தில் பகிர்ந்து அளிக்கப்படும்.

(ஊ) நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, முறையே பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கிடையில் 38:31:31 என்ற வீதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

(எ) பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி பகிர்ந்து கொடுக்கும் அடிப்படை தொடர்பான ஆணைகள், ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றால் தனியே பிறப்பிக்கப்படும்.

(ஏ) 3(ஈ) பத்தியின்படி நிதிகளை வழங்குவது காலாண்டு அடிப்படையில் இருக்கும். இது தொடர்பான ஆணைகள், நிதித்துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றால் பிறப்பிக்கப்படும். கணக்குகளில் அடிப்படையில், இறுதி சரிக்கட்டல்கள் எவையேனுமிருப்பின், அவை அடுத்துவரும் ஆண்டில் முதல் காலாண்டில் சரிக்கட்டப்படும்.

(ஐ) பத்தாம் மைய நிதிக் குழுவின் பரிந்துரைகளின்கீழ் மூலதன மானியங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான கோட்பாட்டை, ஒவ்வோராண்டும் அரசு முடிவு செய்யும்.

(ஒ) உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கான ஓய்வூதிய நிதி பற்றிய தற்போதைய முறை தொடரப்படும். உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் பணியாளர்களுக்கான ஓய்வூதியப் பங்குத்தொகையைச் செலுத்தத் தவறுமாயின் அல்லது இந்நிதியில் பற்றாக்குறை இருப்பின், அந்தக் குறைவு, அரசு, உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டிய நிதியில் சரிக்கட்டப்படும்.

(ஓ) உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை வைத்து வருவதற்கான தற்போதைய முறை தொடரப்படும்; வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் பங்குத்தொகையை வரவு வைக்க உள்ளாட்சி மன்றங்கள் தவறும் நேர்வில், அத்தொகை, வட்டியுடன் சேர்த்து, அரசு வழங்க வேண்டியத் தொகையில் சரிக்கட்டப்படும். உள்ளாட்சி

மன்றங்களுக்கு அகவிலைப்படியை ஈடுசெய்வதற்கான மானியம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(ஔ) சிறு கனிமப் பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய், உள்ளாட்சி மன்றக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படும்; கருங்கல்லிலிருந்து கிடைக்கும் வருவாய் வரவுகளும் உள்ளாட்சி மன்றங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். பெருங்கனிமங்களிலிருந்து கிடைக்கும் உரிமத்தொகை எதுவும் உள்ளாட்சி மன்றங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படமாட்டாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.வி. ராஜாராமன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-9.
நகராட்சி நிருவாகம் - குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை-5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108.
மாநகராட்சிகள் தலைமை இயக்குநர், சென்னை-9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
மாநில கணக்குத்துறை தலைவர், சென்னை-18.
மாநில கணக்குத்துறை தலைவர், சென்னை-35.
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.
ஆணையர், அனைத்து மாநகராட்சிகள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து உதவி பேரூராட்சி இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஒன்றிய அலுவலர் முகமை.
நிதி (ஊரக வளர்ச்சி/நகராட்சி நிருவாகம் - குடிநீர் வழங்கல்/வீட்டு வசதி/வரவு செலவுத் திட்டம் பொது-1/வரவு செலவுத் திட்டம்-ஒருங்கிணைப்பு/வரவு செலவுத் திட்டம் பொது-2/வருவாய் ஆதாரங்கள்/வழிவகை) துறை, சென்னை-9.

நகல் பெறுநர்:-
முதல் அமைச்சரின் செயலாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
ஆளுநர் செயலகம், சென்னை-25.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஆராய்ச்சி அலுவலர்.